| 30) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.1–ல் போளூர் சாலை 6 மற்றும் 7, புதுத் தெரு 10 ஆகிய தெருக்களிலுள்ள ஆழ்துளை கிணறுகள் பழுதடைந்து தூர்ந்துள்ளதால், அப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் குடிநீர் பிரச்சனையால் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, ஆழ்துளை கிணற்றை புதுப்பித்தும், புது மோட்டார் மற்றும் குடிநீர் டேங்கு வசதி ஏற்படுத்தி தருமாறு நகரமன்ற உறுப்பினர் தெரிவித்ததன் பேரில், மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 194 அனுமதிக்கப்பட்டது. |
| 31) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.4–ல் முத்துவிநாயகர் கோவில் தெருவில் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் வண்ணப்பூச்சி மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, ஆணையாளர் குடியிருப்பு வளாகத்தில் வண்ணப்பூச்சு வேலை மற்றும் பழுது நீக்கம் செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 195 அனுமதிக்கப்பட்டது. |
| 32) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.7 ஜொனகரைபாறைத் தெரு, பேகோபுரம் 11–வது தெரு, பேகோபுரம் பிரதான தெரு, பேகோபுரம் 9–வது தெரு, வேம்புலி மாரியம்மன் கோயில் தெரு ஆகிய தெருக்களில் வசிக்கும் பொதுமக்கள் கோடைக் காலத்தில் குடிநீர் போதியளவு இல்லாததால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அப்பகுதியிலுள்ள சிறுமின் விசைபம்புகளை பழுதுநீக்கம் செய்திட நகரமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் அடிப்படை வசதியை பூர்த்தி செய்யும் வகையில், மேற்காணும் பகுதிகளிலுள்ள பழைய சிறுமின் விசைபம்புகளை பழுதுநீக்கம் செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 196 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 33) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.10 பெருமாள் நகர் பகுதியில், திருமலை நகர் பகுதியில் மழைநீர் கால்வாயில் சிறுபாலம் பழுதடைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் வெறியேராமல் பக்கங்களில் உள்ள நிலப்பரப்பிற்கு சென்று அப்பகுதி மக்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, பழுதடைந்த சிறுபாலத்தை அப்புறப்படுத்தி, வெள்ளப்பெருக்கிற்கு ஏற்றால்போல் கொள்ளவு கொண்ட மழைநீர் கால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்திட நகரமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, மேற்காணும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். 197 அனுமதிக்கப்பட்டது. |
| 34) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.10 பெருமாள் நகர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் உடைந்து தெருக்களில் கழிவுநீர் வழிந்தோடுகிறது. இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. பொதுமக்களுக்கு சுகாதாரமற்ற சீர்கேடு ஏற்படுவதால் இதனை சரிசெய்திட அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, மேற்காணும் பாதாள சாக்கடை குழாயினை பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு செய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 198 அனுமதிக்கப்பட்டது. |
| 35) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.11–ல் மூன்று இடங்களில் சிறுமின் விசைபம்பு பழுதடைந்துள்ளதால், அப்பகுதி பொதுமக்கள் கோடைக் காலத்தில் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, மேற்காணும் 3 எண்ணிக்கை சிறுமின் விசைபம்புகளில் பழுதுகள் மற்றும பராமரிப்பு பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் வடிகால் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். 199 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>36)</td><td>திருவண்ணாமலை நகராட்சி, டான்காப் இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட கட்டுமானப் பணிகள் துவங்கும் நிலையில் உள்ளது. தற்போது டான்காப் நிறுவனத்தின் மும்முனை மின் இணைப்பு பயன்பாடற்ற நிலையில் இருந்துவருகிறது. மேலும், மின் இணைப்பிற்கான நிலுவை மின்கட்டண தொகை ரூ.73,579/- டான்காப் நிறுவனம் செலுத்தாமல் நிலுவையில் உள்ளதாக அறியவருகிறது. தற்போது கட்டுமான பணி துவங்கிட ஏதுவாக டான்காப் நிறுவனத்தின் பெயரில் உள்ள மும்முனை மின் இணைப்பினை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு மாற்றிடவும், நிலுவைத் தொகை ரூ.73,579/- நகராட்சியின் திட்ட நிதியிலிருந்து செலுத்திடவும், மேலும் இத்தொகையினை எதிர்காலத்தில் கூட்டு ஒப்பந்தத்தின்படி டான்காப் நிறுவனத்திடமிருந்து நகராட்சி சார்பாக செலுத்திய தொகையினை நேர்வில் ஈடுசெய்து கழித்து மீதத் தொகை செலுத்தலாம் என்ற நிபந்தனையின்படி மின்கட்டணத் தொகையினை நகராட்சி மூலம் மின்சார வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திட்ட நிதியின் கீழ் தொகை வழங்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 0179/2014/இ1)</td><td>தீர்மானம் எண். 200 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>37)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின் வார்டு எண்.28ல் உள்ள தாமரைக் குளத்தையொட்டி டோபிக்கானா (சலவை தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடம்) பகுதியில் கீழ்க்காணும் பணிகளுக்கு 23.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">திருவண்ணாமலை நகராட்சியின் வார்டு எண்.28ல் உள்ள தாமரைக் குளத்தையொட்டி டோபிக்கானா (சலவை தொழிலாளர்கள் தொழில் செய்யும் இடம்) பகுதியை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி.</td><td>G.Kalidoss<br>15/13.Vadaveethi<br>Subramaniyar Kovil Street,<br>Thiruvannamalai.</td><td rowspan="2">10.00</td><td>0.01 % குறைவு</td></tr>
<tr><td>Gold Construction<br>Vel Nagar Cross Street,<br>Thiruvannamalai.</td><td>3.22 % அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மானம் எண். 201 அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | டோபிக்கானா பகுதியில் சலவை இயந்திரம் பொருத்தும் அறை அமைத்தல், போர்வெல் மற்றும் தளம் அமைக்கும் பணிகள். | G.Kalidoss<br>15/13.Vadaveethi<br>Subramaniyar Kovil Street,<br>Thiruvannamalai. | 9.00 | 0.00 % குறைவு |
| | | Gold Construction<br>Vel Nagar Cross Street,<br>Thiruvannamalai. | | 0.76 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1 மற்றும் **2**–ல் காணும் பணிகளுக்கு திரு.G.Kalidoss, Thiruvannamalai என்பவரின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.1829/2023 /இ1)**

38) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16118/2022/CFC–1 நாள் 21.03.2023–ல் 15–வது நிதிக் குழு மானியம் (Tied Grant) 2022–23 ஆம் ஆண்டின் கீழ் திருவண்ணாமலை நகராட்சியின் திடகழிவு மேலாண்மை பணிகளுக்கு 6 எண்ணிக்கை LCV வாகனங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.43.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

தீர்மானம் எண். **202** அனுமதிக்கப்பட்டது.

| SI.NO | Name of the Municipality | Allotment | Earmarked for ULB Contribution | Already Permission Accorded | Amount for Vehicles (LCV) | Balance Amount |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| 1 | Tiruvannamalai | 246.98 | 87.94 | 0.00 | 43.80 | 115.24 |

15–வது நிதிக் குழு மானியம் (Tied Grant) 2022–23 ன் கீழ் மொத்த ஒதுக்கீடு தொகை ரூ.246.98 இலட்சம் ஆகும். இதில், ரூ.87.94 இலட்சம் பொது கழிப்பிடம் – ரூ.2.60 இலட்சமும், MRF – ரூ.38.00 இலட்சமும், எரிவாயு தகன மேடை பணிக்கு – ரூ.47.34 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், LCV வாகனம் கொள்முதல் செய்ய ரூ.43.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.115.24 இலட்சத்திற்கு கீழ் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பணிகள் விவரம் :**

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>Sl.No.</th><th>Name of the work</th><th>Estimate Amount (Rs.in Lakhs)</th></tr>
<tr><td>1</td><td>Supply and Delivery of Speed Heavy Truck Chassis Mounted Suction cum Jetting Machine of 8000 Litre Tank Capacity (SPEED-TMSCJM-8K-16 TON Chassis) in Tiruvannamalai Municipality.</td><td>65.00</td></tr>
<tr><td>2</td><td>Supply, Delivery, Erection and commissioning of 8200 LPM X 20 m Head Vertical Turbine Pump with Motor and Fully Automatic Auto Transformer Starter including cables, capacitor, specials at Ulagallapadi head Works (Raw Water)-Phase II</td><td>26.20</td></tr>
<tr><td>3</td><td>Replacement of Power Control Center at Water Treatment Plant</td><td>25.00</td></tr>
<tr><td colspan="2">Total</td><td>116.20</td></tr>
</table>
மேற்கண்ட ஒதுக்கீட்டு தொகையில் ரூ.115.24 இலட்சம் 15வது நிதிக்குழு மானியமாகவும், ரூ.0.96 இலட்சம் நகராட்சியின் பொது நிதியாகவும் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்கு குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 2354 /2020/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>39)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்–26 அக்னிலிங்கம் மேல் பகுதி Inlet Channel – Culvert சிதலமடைந்து தூர்ந்த நிலையில் உள்ளது. மேலும், RS நகர் செல்லும் சாலையின் இடது புறமுள்ள கால்வாய் மண் கால்வாயாக உள்ளதால், கழிவுநீர் சாலை பகுதியில் தேங்கிய நிலையில் உள்ளது. பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பணிகளை பராமரிப்பு பணியின் கீழ் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்கு குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண். 0028/2023/இ1)</td>
<td>தீர்மானம் எண். 203 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>40)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்–22 சமுத்திரம் காலனி நடுத் தெருவில் பொதுமக்களால் கால்வாய் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு, மிகவும் சிதலமடைந்த நிலையில் தூர்ந்துள்ளது. மேலும், சமுத்திரம் காலனி நடுத் தெருவில் NSMT திட்டத்தில் சாலைப் பணி அமைக்கப்படவுள்ளதால், கால்வாய் புதியதாக அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்கு குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண். 204 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 0719/2023/இ1)</td><td></td></tr>
<tr><td>41)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின் பொறியியல் பிரிவு TN 25 2969 குடிநீர் வாகனத்தின் தண்ணீர் இறைக்கும் பம்ப் மற்றும் கியர் பழுது சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.0.65 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண்.157 நாள் 18.05.2023ல் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 13.06.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்க பொருள் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.லட்சம்)</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ்<br>77பி, மத்தலாங்குளத்தெரு<br>திருவண்ணாமலை.</td><td rowspan="3">0.65</td><td>64,904/–</td></tr>
<tr><td>2</td><td>கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ்<br>18, முத்துவிநாயகர் கோவில் தெரு<br>திருவண்ணாமலை.</td><td>67,850/–</td></tr>
<tr><td>3</td><td>திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க் ஷாப்<br>கீழ்நாச்சிப்பட்டு,<br>திருவண்ணாமலை.</td><td>66,860/–</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு<br>
1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ், திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br><br>
கோப்பு எண்.0968/2023/இ2</td><td>தீர்மானம் எண். 205 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>42)</td><td>மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். அ3/3065/2022 நாள் 02.06.2023ல், மாவட்ட கனிம வள நிதி (District Mines Foundation Fund) திட்டத்தின் கீழ் பல்லவன் நகரில் குடிநீர் தொட்டி அமைக்க மதிப்பீடு ரூ.15.50 இலட்சமும் மற்றும் நியாய விலைக்கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.16.20 இலட்சமும், மொத்தம் ரூ.31.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>
மேற்கண்ட நிர்வாக அனுமதியை தொடர்ந்து, 06.07.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அன்றைய தினமே ஒப்பந்தப்புள்ளி விலைப்பட்டியல் திறக்கப்பட்டதில், பெறப்பட்டுள்ள</td><td>தீர்மானம் எண். 206 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் பல்லவன் நகரில் 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்தல். | 15.50 | M/s.Srinivasa Constructions | 0.08% குறைவு |
| | | | M/s.Linga Construction | 5.28% அதிகம் |
| 2 | இந்நகராட்சியின் பல்லவன் நகரில் புதிய நியாய விலைக்கட்டிடம் கட்டுதல். | 16.20 | M/s.Srinivasa Constructions | 0.08% குறைவு |
| | | | M/s.Linga Construction | 4.74% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காணும் பணியில் வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Srinivasa Constructions, திருவண்ணாமலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.2643/2023/இ1**

43) திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்–36 கம்மங்கொல்லை தெரு, குறுக்கு தெருவில் 70 மீட்டர் நீளத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி சாலையானது மண் சாலையாக உள்ளதால், மழைக்காலங்களில் மழைநீரானது மண் சாலையில் வழிந்தோடி செல்கிறது. இதனால் அப்பகுதி மக்கள், போக்குவரத்து வாசிகள் செல்வதற்கு மிகவும் சிரமம்மாக உள்ளதை சரிசெய்திட அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் கொடுத்துள்ள கடிதத்தின்படி, அப்பகுதியில் பேவர் பிளாக் சாலை மற்றும் சிறுபாலம் அமைத்திடும் பணிக்கு ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக்கு குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண். 207 அனுமதிக்கப்பட்டது.

44) திருவண்ணாமலை நகராட்சியில் கீழ்நாத்தூர் தெருவில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடத்தில், புதியதாக நகர்ப்புற சுகாதார நல மையம் கட்டும் இடத்தில் இடையூறாக உள்ள மின்கம்பத்தினை மாற்றி வேறு இடத்தில் அமைக்க வேண்டியுள்ளதால், மின் கம்பத்தை மாற்றியமைப்பதற்கு கூடுதல் கட்டணம் ரூ.1,20,360/– SE, TANGEDCO, THIRUVANNAMALAI அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி

தீர்மானம் எண். 208 அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2354/2020/இ1) | |
| 45) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.26 மகா சக்தி நகர் சாலையின் இடதுபுறம் மழைநீர் வடிகால்வாய் இல்லாததால், வலதுபுறம் உள்ள கால்வாயுடன் கல்வெட்டு அமைத்து இணைக்க வேண்யுள்ளது. மேலும், கல்வெட்டு உயரத்திற்கு சாலையில் RAMP அமைத்திட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு ரூ.1.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியில் செலவினை மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **209** அனுமதிக்கப்பட்டது. |
| 46) | திருவண்ணாமலை நகராட்சியின் கீழ் செயல்பட்டுவரும் ஒன்பது பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பயன்படும் வகையில் 12 எண்ணிக்கையில் கணினிகள் மற்றும் 9 எண்ணிக்கையில் அச்சுப்பொறிகள் மற்றும் Computer & Printer வழங்கிடுமாறு அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் அளித்துள்ள கடிதங்களின்படி ELCOT, Chennai என்ற நிறுவனத்தில் மேற்படி, Computer & Printer–கள் கொள்முதல் செய்திடவும், மேற்படி கணினி பயன்பாடுகள் மின்தடையின்றி செயல்பட 1KVA UPS–12 எண்ணிக்கையில் கொள்முதல் செய்திட ELCOT, Chennai என்ற நிறுவனத்தில் இருப்பு இல்லாததால், வெளி சந்தையில் விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்திடவும் தோராய செலவினம் ரூ.7,85,000/– திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கல்வி நிதியில் செலவினை மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.2581/2023/இ1) | தீர்மானம் எண். **210** அனுமதிக்கப்பட்டது. |
| 47) | திருவண்ணாமலை நகராட்சியின் அனைத்து பிரிவுகள் தொடர்புடைய, கீழமை நீதிமன்ற வழக்குகள், உயர் நீதிமன்ற வழக்குகள், உச்ச நீதிமன்ற வழக்குகள், தேசீய பசுமை தீர்ப்பாய வழக்குகளில், ஏற்கனவே ஆஜராகியுள்ள வழக்கறிஞர்களுக்கான கட்டணம், வரும் காலத்தில் ஆஜராகவுள்ள ஆண்டிற்காக | தீர்மானம் எண். **211** அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | உத்தேசமான தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) தேவையாகிறது. நீதிமன்ற வழக்குகளில் நகராட்சி சார்பில் ஆஜராகி வாதிடும் வழக்கறிஞர்களுக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.105/2023/எப்2) | |
| 48) | திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., திருவண்ணாமலை கடிதம் ந.க.எண்.1255/விபி/2023, நாள் 03.05.2023ல், முத்துவிநாயகர் கோவில் தெருவில் உள்ள நகர்ப்புற சுகாதார நல மையத்தின் வெளிப்பகுதியில் உள்ள தெருவில் 10x12 சதுரடி இடத்தினை தரை வாடகை அடிப்படையில் ஆவின் பாலகம் அமைத்து விற்பனை மேற்கொள்ள அனுமதி கோரியுள்ளார். மேற்படி விண்ணப்பத்தினை நகரமைப்பு ஆய்வரின் ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டதில், நகரமைப்பு ஆய்வாளரின் ஆய்வுக் குறிப்பில் ஆவின் பாலகம் வைத்துக்கொள்ள அனுமதி வழங்க தெரிவித்துள்ளார். மேற்படி காலியிடத்திற்கு மாத அடிப்படையில் தரை வாடகை ரூ.5942/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மாத வாடகை ரூ.5942/- மற்றும் வரிகள் என்ற அடிப்படையில் தரை வாடகை நிர்ணயம் செய்துள்ளதை அனுமதிக்கலாம்.<br>3. குத்தகை இனத்தில் சேர்த்து வாடகை வசூலிக்க அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1858/2023/அ1) | தீர்மானம் எண். **212**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 49) | இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணியாளராக பணிபுரியும் திரு.சி.விஜயபாலன் என்பவர் வேலூர் தொழிலாளர் நல நீதிமன்றத்தில் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தனக்கு, தன்னோடு பணிபுரிந்த ஏனைய தற்காலிக பணியாளர்களை அரசாணை நிலை எண்.125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1999 ன்படி பணி நிரந்தரம் செய்யப்பட்ட நாள் முதல் தன்னையும் நிரந்தர பணியிடத்தில் பணி நியமனம் செய்திட வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட (வழக்கு I.D.No.72/2014) திரு.சி.விஜயபாலன் என்பவரின் கோரிக்கையை பரிசீலித்து இந்நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் திரு.பார்த்தசாரதி என்பவரால் 10.03.2022 முதல் பணி நியமனம் செய்யப்பட்டதன் அடிப்படையில் எழும் தகராறுகளை தீர்த்து வைப்பது சம்மந்தமாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>திரு.சி.விஜயபாலன் என்பவரால் வேலூர் தொழிலாளர் நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட | தீர்மானம் எண். **213**<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொழில் தகராறு சட்டத்தின் கீழான தொழில் தகராறு மனு எண்.72/2014ல் முதன்மை தலைமை ஏற்பு அதிகாரியால் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.<br>"இந்த தொழில் தகராறு மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு அவரோடு பணிபுரிந்த மற்ற பணியாளர்கள் 27.05.1999 நாளிட்ட அரசாணையின்படி எப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டார்களோ அதே தேதிக்கே மனுதாரரையும் நிரந்தர பணியாளராக அமர்த்தி, அவருக்கு தொடர்ந்து வழங்கி, பணி தொடர்ச்சியுடனும் பின் சம்பளத்துடன் மற்றும் எல்லா சலுகைகளுடன் பணியில் அமர்த்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது"<br>மேற்சொன்ன தொழிலாளர் நல நீதிமன்ற உத்தரவை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண் மற்றும் மேல்முறையீட்டு மனுக்கள் மீது அவ்வப்போது சென்னை உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகள் / இடைக்கால உத்தரவுகள் செயல்படுத்தப்படாத காரணத்தால் 09.03.2023 அன்று நகராட்சியால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள மேல்முறையீட்டு மனு எண் (எண்.61/2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்வழக்கில் மேல்முறையீட்டு மனுதாரரால் நகராட்சி சார்பில் ஆஜரான அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (திரு.எஸ்.சிலம்பணன், உயர்நீதி மன்றத்தால் உத்தரவிடப்பட்ட தொழில் தகராறு சட்டம் பிரிவு 17-Bன் கீழ் வழங்கப்பட வேண்டிய கூலித் தொகையை கணக்கிட்டு வழங்கிட வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தவில்லை என்ற ஒரே காரணத்திற்காக நீதிப்பேராணை எண்.7922/2016ஐ தள்ளுபடி செய்தது தவறு என்ற விபரத்தை முன்வைத்தபோது அந்த விபரத்தை ஏற்றுக்கொண்ட சென்னை உயர்நீதிமன்ற அமர்வு அடுத்த விசாரணை நாளான 23.03.2023 அன்று தொழில் தகராறு சட்டம் விதி 17-Bன் கீழ் செலுத்தப்பட வேண்டிய கூலித் தொகையை கணக்கிட்டு வழங்கி அது குறித்து விவரங்களை தெரிவித்திட கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டு<br>❖ When the matter is taken up for hearing. Mr.S.Silambanan, learned Additional Advocate General would submit that the dismissal of the writ petition by the learned single Judge was on the ground of non-compliance of the order passed by this Court for payment of wages under section 17B of the Industrial Disputes Act 1947.<br>❖ It is also to be noted that the powers of this Court under Article 215 of the Constitution of India cannot be curtailed by the provisions of Contempt of Courts Act on the question of limitation, and as far as the case on hand is concerned. The Writ Appeal is filed on the ground that the learned single judge ought not have dismissed the writ petition on the grounjd of non-compliance of section 17-B of I.D. Act and should have decided the case on merits.<br>❖ For payment of wages under section 17-B of I.D. Act post the matter on 23rd March 2023.<br><br>வழக்கு விசாரணையை 23.03.2023 தேதிக்க ஒத்திவைத்து, சென்னை உயர்நீதிமன்ற அமர்வால் உத்தரவிடப்பட்டுள்ளது. | |

மேற்சொன்ன வழக்கு 23.03.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேல்முறையீட்டு மனுதாரர் தரப்பில் ஆஜரான அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் எதிர்மனுதாரர் திரு.சி.விஜயபாலன் ஏற்கனவே நகராட்சியில் நிரந்தர பணியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்ற தகவலை பதிவு செய்தார். இரு தரப்பு வாதங்களை பதிவு செய்து கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு கீழ்க்கண்டவாறு தனது கருத்தை பதிவு செய்து உத்தரவு பிறப்பித்தது.

"We make it very clear that once the employee is reinstated, he shall be paid wages on par with his counterparts. This Court made a remaining amount lying in deposit may be withdrawn together with accrued interest and that the Workman can be advised to give up backwages. We have also suggested to the learned counsel appearing for the Management that pursuant to the Award on the Labourf Court, he shall be extended with benefits nationally in terms of the Award and the entire award will be taken into account for the purpose of continuous and contrinuity of service except backwages, the may be given up by the Workman. Both the counsels have stated the they will report on the next date of hearing after putting across the suggestions to the parties."

வழக்கு விசாரணையை 10.04.2023ம் தேதிக்கு ஒத்தி வைத்து உயர்நீதிமன்ற அமர்வால் உத்தரவிடப்பட்டது.

மேற்சொன்ன வழக்கு 10.04.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கீழ்க்கண்டவாறு தனது கருத்தை பதிவு செய்து, அன்றைய தினம் மனுதாரர் தரப்பு மற்றும் எதிர் மனுதாரர் தரப்பும் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை 19.04.2023 க்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

- ❖ When the matter was taken up, learned counsel appearing on behalf of the appellant submitted that the employee would be paid wages under section 17B of the Industrial Disputes Act, 1947 from the date of filling of the writ petition till date of his reinstatement i.e. 10/03/2022.
- ❖ As already observed by this Court in the order dated 23.03.2023, once the employee is reinstated, he is entitled to wages on par with his counterparts.
- ❖ A representative of the appellant and the 2nd respondent / Workman shall be present before this Court on the next date of hearing to ascertain the possibility of settlement with regard to backwages as the employee has already been reinstated.

மேற்சொன்ன வழக்கு 19.04.2023ல் பட்டியலிடப்பட்ட போதும், வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீளவும் வழக்கு 26.04.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நகராட்சி ஆணையாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நேரில் அஜராகி, அரசு கூடுதல் தலைமை

வழக்கறிஞரை சந்தித்து இவ்வழக்கு குறித்து விவாதித்தபோது, வழக்கெழு வினாவாக இருக்கக் கூடிய மனுதாரருக்கு மீளவும் பணி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, அன்னார் தொழில் தகராறு சட்டத்தின்படி அனைத்து நிவாரணங்களும் பெறத் தகுதியுடையவராகிறார். எனவே, ஏற்கனவே சென்னை உயர்நீதி மன்றத்தால் உத்தரவிடப்பட்டவாறு தொழில் தகராறு சட்டம் 17Bன் கீழ் வழங்க வேண்டிய கூலித் தொகையை கணக்கிட்டு நாளை (27.04.2023) காலை 10.00 மணிக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் அறிவுறுத்தியவாறு, எதிர்மனுதாரரான திரு.சி.விஜயபாலன் என்பவருக்கு தொழில் தகராறு சட்டம் 17Bன் கீழ் வழங்க வேண்டிய கூலித் தொகையை கணக்கிட்டு, அதற்கான காசோலையை சென்னை உயர்நீதி மன்றத்தில் நாளை (27.04.2023) தாக்கல் செய்யப்பட வேண்டியுள்ளதால், கூலி கணக்கிடப்பட்டு தொகை ரூ.2,16,070/- வழங்கிடவும் அதனைத் தொடர்ந்த வழக்கு செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்கு குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.9696/2016/இ1)

50) திருவண்ணாமலை நகராட்சியின் வார்டு எண்.24 வ.உ.சி. நகர் 7-வது மற்றும் 8-வது தெருவிலுள்ள சிறுபாலங்கள் தூர்ந்த நிலையிலுள்ளதை அகற்றி புதியதாக இரண்டு சிறுபாலங்கள் அமைத்திடும் பணிகளுக்கு 07.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி** |
|---|---|---|---|
| 1 | M/s.Arunai Constructions, 136/52.மத்தலாங்குளத் தெரு, திருவண்ணாமலை. | 2.85 | 0.17 % குறைவு |
| 2 | M/s. IRC Constructions, 18.குபேர நகர், வேங்கிக்கால், | | 3.01 % அதிகம் |

தீர்மானம் எண். **214** அங்கீகரிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | திருவண்ணாமலை. | | |

**அலுவலகக் குறிப்பு :**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1 கண்டுள்ள M/s.Arunai Constructions, திருவண்ணாமலை என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 0021 /2023 /இ1)

---

51) இந்நகராட்சியின் வார்டு எண்.1 முதல் 39 வரையுள்ள வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் பழுதடைந்த மினிபவர் பம்புகளை மாற்றி, புதியதாக மினிபவர் பம்புகளை சப்ளை செய்யும் பணிக்கு, 14.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 215**
**அனுமதிக்கப்பட்டது.**

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் உலகலாப்பாடி நீரேற்று நிலையத்தில் 120 HP திறன் கொண்ட Verticial Turbine Motorனை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல். | 5.00 | Mr.V.M.Elumalai | 0.21% குறைவு |
| | | | Mr.Jayabal | 0.10% அதிகம் |
| 2 | **இந்நகராட்சியின் புதிய அண்ணா நகர் நீருந்து நிலையத்திலுள்ள 100 HP மின்மோட்டார் பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல்.** | 4.80 | Mr.V.M.Elumalai | 0.10% குறைவு |
| | | | Mr.Jayabal | 1.39% அதிகம் |
| 3 | இந்நகராட்சியின் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தின் **1.** திட்டம் 1ல் 8" வால்வு பழுதினை சரிசெய்தல், **2.** திட்டம் 3ல் Vaccum pump கழற்றி திட்டம் 2ல் Vaccum pump பழுது சரி செய்து பொருத்துதல், **3.** Star Delta starterல் Meter, Preventer, 400 AMPS HRC Main switch பழுது சரிசெய்தல், **4.**அண்ணா நகர் வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் உள்ள 5 HP, 7.5 HP Submersible மோட்டார் 7.5 HP Monoblock பழுதான மின்மோட்டாரை சரிசெய்தல், **5.**சமுத்திரம் ஏரியில் உள்ள 12.5 HP Submersible மோட்டார் ஆழ்துளை கிணற்றில் மாட்டிக் கொண்டதை எடுத்து பழுதை சரிசெய்தல், **6.**சமுத்திரம் | 4.22 | Mr.V.M.Elumalai | 0.10% குறைவு |
| | | | Mr.Jayabal | 1.50% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏரியில் உள்ள 30 HP & 50 HP Submersible மோட்டார் பழுதை சரிசெய்தல். | | | |
| 4 | இந்நகராட்சியின் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் Clear Water Sumpல் 2 எண்ணிக்கையில் 30 HP மின்மோட்டார் பழுது மற்றும் பராமரித்தல் (1 Raw Water & 1 Back wash motor) பொருத்துதல். | 1.80 | Mr.V.M.Elumalai | 0.24% குறைவு |
| | | | Mr.Jayabal | 0.10% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.2015/2022/இ2**

52) திருவண்ணாமலை நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 167020 ஆகும். திருவண்ணாமலை நகராட்சியின், குடிநீர் பயன்பாட்டிற்கு உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, பொது மக்களுக்கு சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி குடிநீர் சுத்திகரிப்பிற்கு நாள் ஒன்றுக்கு 100 கிலோ அளவில் ஆலம் (Ferric Alum Grade–4) தேவைப்படுகிறது. தற்பொழுது ஆலம் கையிறுப்பு மிகவும் குறைவாக இருப்பதால், அடுத்த ஆறு மாத காலத்திற்கு உத்தேசமாக 22 மெ.டன் ஆலம் தேவைப்படுகிறது. குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு 22 மெ.டன் ஆலம் கொள்முதல் செய்திட ரூ.4.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.

**கோப்பு எண். 2731 /2023/இ1**

**தீர்மானம் எண். 216 அனுமதிக்கப்பட்டது.**

53) திருவண்ணாமலை நகராட்சியின் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் முதலாவது சுத்திகரிப்பு நிலையத்தில் Air Compressor முற்றிலும் பழுதடைந்துள்ளதால், இரண்டாவது சுத்திகரிப்பு நிலைய Air Compressor லிருந்து தனியாக 35 மீட்டர் பைப்லைன் அமைத்து முதலாவது, Filter bed Backwashக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது.

குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட பணிக்கு ரூ.0.80

**தீர்மானம் எண். 217 அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டினை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். | |
| 54) | திருவண்ணாமலை நகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை 167020 ஆகும். இந்நகராட்சியில் 39 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. இந்நகரில் ஒவ்வொரு நாளும் 55 டன் குப்பை சேகரமாகிறது. இதில் 30.25 டன் மக்கும் குப்பையும், 19.25 டன் குப்பையும், கழிவு மண் 5.50 டன் குப்பையும் பிரிக்கப்படுகிறது. பிரிக்கப்பட்ட குப்பைகளை, இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் 11 எண்ணிக்கை நுண்ணுர மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரமாக்கப்படுகிறது.<br>மேலும், 11 எண்ணிக்கை நுண்ணுர மையங்களில் shredding Machine, Belt Conveyor, Motorகள் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால், இயந்திரங்கள் இயக்க முடியாமல் குப்பைகளை தரம் பிரிக்க இயலாத நிலை உள்ளது. எனவே, நுண்ணுர மையங்கல் குப்பைகளை பிரித்து உரமாக்கும் வகையில், மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய ரூ.7.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், 11 நுண்ணுர மையங்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு செய்ய (ஒரு மையத்திற்கு மாதம் ரூ.1000 வீதம்) ரூ.1.56 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, 11 நுண்ணுர மையங்களை பழுது மற்றும் பராமரிப்பு செய்யவும், ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு செய்யவும் ஆகும் செலவினம் ரூ.9.01 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **218** அனுமதிக்கப்பட்டது. |
| 55) | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் 60 மின்கல வாகனங்களில் 5 வாகனங்களின் மின்கல பெட்டி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி வாகனங்களுக்கு புதிய மின்கல பெட்டி | தீர்மானம் எண். **219** அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>பொருத்தம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி அல்லது திடக்கழிவு கட்டணம் ஆகியவற்றில் இருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2037/2023/எச்1)</td><td></td></tr>
<tr><td>56)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின், 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3162/2023/சி1)</td><td>தீர்மானம் எண். 220<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>57)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின், 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3162/2023/சி1)</td><td>தீர்மானம் எண். 221<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>58)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின், 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.3162/2023/சி1)</td><td>தீர்மானம் எண். 222<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>59)</td><td>திருவண்ணாமலை நகராட்சி, புதிய அலுவலகத்தின் முன்புறம் அமைக்கப்பட்ட Cow Gate குழாய்கள் பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றியமைக்கும் பணிக்கு, நகரமன்ற தீர்மானம் எண். 142 நாள் 18.05.2023ல் மன்ற அனுமதி பெறப்பட்டு, 23.05.2023 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 24.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி விலைப்பட்டியல் திறக்கப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">திருவண்ணாமலை நகராட்சி, புதிய அலுவலகத்தின் முன்புறம் அமைக்கப்பட்ட Cow Gate குழாய்கள் பழுதடைந்துள்ளதை புதியதாக மாற்றியமைக்கும் பணிக்கு</td><td rowspan="2">0.85</td><td>M/s.Arunai Construction</td><td>0.74% குறைவு</td></tr>
<tr><td>M/s.IRC Construction</td><td>2.56% அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s.Arunai Construction,</td><td>தீர்மானம் எண். 223<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>**கோப்பு எண்.0021 /2023/இ1** | |
| 60) | மாண்புமிகு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, மாவட்ட ஆட்சியரகத்தில் 24.06.2023 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தை சார்ந்த நகராட்சிகளில் நடைபெற்று வரும், அரசு திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டத்தில், திருவண்ணாமலை நகராட்சியில் நடைபெற்று வரும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் சமயத்தில், மிகவும் பிரசித்திப்பெற்ற பௌர்ணமி தினத்தன்று, இலட்சக்கணக்கான பொதுமக்கள் கிரிவலம் செல்லும் சமயத்தில் கிரிவலப்பாதையிலும், பொது சாலைகளிலும் கால்நடைகள் சுற்றித்திரிவதால், பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக இருப்பதுடன், அச்சத்துடன் செல்லுகின்ற நிலை ஏற்படுகிறது எனவும், அவைகளை கட்டுப்படுத்தும் விதமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது இடங்களிலும் சாலைகளிலும் கால்நடைகள் சுற்றிதிரியாத வண்ணம் உரிமையாளர்கள் மீது நகராட்சி மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.<br>எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதின் பேரில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள்–2023 ன்படி கீழ்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br>(அ) கால்நடைகள் வளர்ப்போர் அனைவரும் நகராட்சியில் அதற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும்<br>(ஆ) உரிமம் பெற்று வளர்த்துவரும் விலங்குகளை அவரவர் சொந்தமான இடத்தில் பாதுகாப்பாக வளர்த்திட வேண்டும். பொது இடங்களிலும், சாலை ஓரங்களிலும் கால்நடைகளை கட்டி பொது இடங்களில் அசுத்தம் செய்யக்கூடாது.<br>(இ) அவ்வாறு வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு எவ்வித தொற்று தன்மை கொண்ட நோய் எதுவும் இல்லாத வண்ணம் பாதுகாப்பாக வளர்க்கப்பட வேண்டும்.<br>(ஈ) ஏதேனும் தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் சமயத்தில் பொது சுகாதார அலுவலர் மற்றும் கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.<br><br>மேற்கண்ட விதிமுறைகளுக்கு மீறி கால்நடைகள் பொது இடங்களில் அல்லது சாலைகளில் சுற்றித்திரிந்தால் கால்நடை உரிமையாளருக்கு, கால்நடை ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் அபராதம் | தீர்மானம் எண். 224<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>விதிக்கப்படும். தொடர்ந்து இரண்டாவது முறையாக பிடிபடும் கால்நடைகளை நகராட்சியால் பறிமுதல் செய்து, பொது ஏலம் விடப்பட்டு, அத்தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்படும் என்ற நிபந்தனைகள் மற்றும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்காக.<br><br>அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2952/2021/எச்1)</td><td></td></tr>
<tr><td>61)</td><td>இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள குடிநீர் வாகனம், பாதாள சாக்கடை தூர் வாரும் வாகனம் மற்றும் ஈப்பு வாகனங்களுக்கு கீழ்கண்டவாறு வாகன காப்பீடு செலுத்த வேண்டியுள்ளது. விவரம் பின்வருமாறு.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வாகன எண்</th><th>வாகன வகை</th><th>வாகன காப்பீட்டு தொகை</th></tr>
<tr><td>1</td><td>TN25AL 5661</td><td>Jeep</td><td>ரூ.12182/–</td></tr>
<tr><td>2</td><td>TN25AL9353</td><td>Jet Rodding</td><td>ரூ.12344/–</td></tr>
<tr><td>3</td><td>TN252969</td><td>Water Tanker Lorry</td><td>ரூ.39729/–</td></tr>
<tr><td>4</td><td>TN25AL9358</td><td>Desilting Auto</td><td>ரூ.9061/–</td></tr>
<tr><td>5</td><td>TN25AL9356</td><td>Desilting Auto</td><td>ரூ.9061/–</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>ரூ.82377/–</td></tr>
</table>
<br>மேற்படி வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய வாகன காப்பீட்டு தொகை ரூ.82377/– The New India Assurance Co.Ltd., Thiruvannamalai அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1, அனுமதி வழங்கலாம்.<br>2. வருவாய் மற்றும் குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.2126/2023/இ2)</td><td>தீர்மானம் எண். 225 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>62)</td><td>திருவண்ணாமலை நகராட்சியின் வார்டு எண்.5 புதுவாணியங்குளம் 2–வது தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கிணற்றின் சுவர் இடிந்து நிலையில் பயன்பாடற்று உள்ளது. இக்கிணற்றில் உள்ள தண்ணீர் நல்ல நிலையில் இருப்பதால், மின்மோட்டார் அமைத்து குடிநீர் தொட்டி கட்டி தந்திட இப்பகுதி மக்கள், கள ஆய்வில் போது கோரிக்கை வைத்துள்ளனர். மேற்படி கிணற்றில் மின்மோட்டார் மற்றும் பாதுகாப்பு மூடி அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:</td><td>தீர்மானம் எண். 226 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3154 /2023/இ1)
</td><td></td></tr>
<tr><td>63)</td><td>

திருவண்ணாமலை நகராட்சியின் மத்திய பேருந்து நிலையம் புதுப்பித்தல் பணிக்காக, வட்டார போக்குவரத்து அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்.அ2/23486/2021 நாள் 12.06.2023ந் தேதிய கடிதத்தில், கீழ்க்காணும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரியுள்ளார்.

1. Passenger's Waiting room for men women with seating acommodation
2. Drinking Water facilities in the waiting room
3. Arrangements for queue system at the booking counters
4. Public Telephone facilities for waiting passengers where possible
5. Left – luggage rooms

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் அடிப்படையில், தற்போது பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>குறைபாடுகளின் விவரம்</th><th>நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட விவரம்</th></tr>
<tr><td>1</td><td>Passenger's Waiting room for men women with seating acommodation</td><td>மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் தயாரிக்கப்படுள்ளது.</td></tr>
<tr><td>2</td><td>Drinking Water facilities in the waiting room</td><td>ஏற்கனவே இரண்டு குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்துவருகிறது. தற்போது waiting room அமைவிடமானது, ஏற்கனவே குடிநீர் தொட்டி அமைந்துள்ள இடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளதால் தனியாக குடிநீர் தொட்டி அமைத்திட தேவையில்லை.</td></tr>
<tr><td>3</td><td>Arrangements for queue system at the booking counters</td><td>ஏற்கனவே சென்னை பேருந்து முன்பதிவு இடத்திற்கு முன்பு மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பெங்களூர் பேருந்து முன்பதிவு இடத்தில் போதிய இடவசதி இல்லை.</td></tr>
<tr><td>4</td><td>Public Telephone facilities for waiting passengers where possible</td><td>பொது தொலைபேசி தற்போது நடைமுறையில் இல்லை.</td></tr>
<tr><td>5</td><td>Left – luggage rooms</td><td>தற்போது பொது சுகாதாரப் பணிக்காக பயன்படுத்தி வரும் அறையினை தற்போது மாற்றம் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.</td></tr>
</table>
</td><td>தீர்மானம் எண். **227**<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே, வரிசை எண்.1–ல் கண்டுள்ள ஆண் / பெண் waiting room அமைத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 2815 /2023/இ1) | |
| 64) | திருவண்ணாமலை நகராட்சியில் ஈசான்யம் பகுதியிலுள்ள எரிவாயு தகன மேடையில் உள்ள Chamber, புகைபோக்கி மற்றும் இதர உபகரணங்கள் பழதடைந்துள்ளதை தொடர்ந்து 20222–23 நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கண்ட உபகரணங்கள் அனைத்தும் புதியதாக அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் EB மின்கசிவு காரணமாக ஒயர்கள் அனைத்தும் எரிந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும்,<br>1. Flooring முழுவதும் உடைந்த நிலையில் உள்ளது.<br>2. கழிப்பறைகள் மூடப்பட்டு பராமரிப்பின்றி உள்ளது.<br>3. எரிவாயு தகன மேடை முழுவதும் கரும்புகை படிந்த நிலையில் உள்ளது.<br>4. முன்நுழை வாயில் உள்ள Portico Weathering Course இல்லாததால் நீர் கசிவு ஏற்பட்டுள்ளது.<br>எனவே, புதியதாக EB Main Switch மற்றும் ஒயர்ங் செய்தல், புதிய வர்ணம் பூசுதல், Flooring Tails அமைத்தல் மற்றும் Weathering Course அமைத்து பயன்பாட்டிற்கு உகந்தவாறு மாற்றம் செய்திட வேண்டியுள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **228** அனுமதிக்கப்பட்டது |
| 65) | திருவண்ணாமலை நகராட்சியில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்களின் முக்கியமான கோரிக்கைகள் தொடர்பான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>தற்போது மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் / திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பின்வரும் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்திட கோரியுள்ளார்.<br>1. திருவண்ணாமலை நகராட்சியில் தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவு குறைவாக இருப்பதால், சாத்தனூர் அணையிலிருந்து வரும் 1,2,3 திட்டத்தின்படி அமைக்கப்பட்ட பழமையான குழாய்களை மாற்றி, பெரிய அளவான குழாய்கள் மாற்றியமைத்து பொதுமக்களுக்கு போதுமான குடிநீர் வழங்கும் பணி. | தீர்மானம் எண். **229** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவிலை தரிசிக்க வரும் ஆன்மீக பக்தர்கள் தங்கிச்செல்ல அனைத்து வசதிகளுடன் கூடிய பல்நோக்கு மையம் (Convention Centre) காந்தி நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைக்கும் பணி.<br>3. திருவண்ணாமலை நகரில் ஈசான்யம் பகுதியில் அமைந்துள்ள காலியிடத்தில் நூலகம், உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய திறந்வெளி கலையரங்கம் அமைக்கும் பணி.<br>4. பழைய நகராட்சி அலுவலக வளாகத்தினை இடித்துவிட்டு புதியதாக வணிக வளாகம் (Commercial Complex) அமைக்கும் பணி.<br>மேற்கண்ட பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தனியார் கலந்தாலோசகர் மூலம் தயார் செய்யவும், இப்பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையில் இருந்து 0.5% to 1% திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கான Consultant தொகையாக வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். | |
| 66) | திருவண்ணாமலை நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் திட்டம் 1–ல் Vertical Turbine Motor – 120 HP 2 எண்ணிக்கையும், திட்டம் 2–ல் Horizontal Swiner Case Motor – 120 HP 2 எண்ணிக்கையும், திட்டம் 3–ல் Horizontal Swiner Case Motor – 150 HP 2 எண்ணிக்கையும் பயன்பாட்டில் உள்ளது. இவற்றுள் திட்டம் 2–ல் உள்ள MSC Pump தேய்ந்த நிலையில் உள்ளதால், Sheft, bearing புதியதாக மாற்றியமைத்திட வேண்டியுள்ளது.<br>மேலும், திட்டம் 3–ல் Drive 1 எண்ணிக்கை மற்றும் Main Switch 3 எண்ணிக்கையும் மாற்றியமைத்திட வேண்டியுள்ளது.<br>எனவே, தற்போதைய நிலை திட்டம் 2–ல் ஒரு Motor–ம், திட்டம் 3–ல் ஒரு Motor மட்டும் இயக்கப்பட்டு வருவதால், Stand by Motor உடன் சரிசெய்யப்பட வேண்டியுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.6.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் தொகை வழங்கலாம். | தீர்மானம் எண். **230** அனுமதிக்கப்பட்டது |
| 67) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.28 தாமரை நகர் 21–வது தெருவில் மொத்தமுள்ள நீளத்தில் பகுதியளவு மட்டும் பகிர்மானக் குழாய் அமைக்கப்பட்டு, பகிர்மானக் குழாய் முடியும் இடத்திலிருந்து குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் இணைப்புகள் தனித் தனியாக எடுத்து செல்லப்பட்டுள்ளது. இதனால் | தீர்மானம் எண். **231** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | குடிநீர் ஒரு சில நேரங்களில் முறையாக வருவதில்லை என பார்வையில் கண்டுள்ள நகரமன்ற உறுப்பினரின் கடிதத்தில் கோரிக்கையாக தெரிவித்துள்ளார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இப்பகுதியில் பாறைகள் இருப்பதினால் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்கப்படவில்லை என தெரியவருகிறது. தற்போது மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால், அப்பகுதியினை ஒட்டி குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்திடலாம். இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.0.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 3157 /2023/இ1) | |
| 68) | திருவண்ணாமலை நகராட்சி **02.12.2008** தேதி முதல் சிறப்புநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மக்கள் தொகை **145278** ஆகும். தற்போதைய மக்கள் தொகை **165045** ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு **13.64** சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகராட்சியில் **39** வார்டுகள் உள்ளது.<br>இந்நகராட்சியில் **6413** எண்ணிக்கை தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br><br>**<u>தெரு விளக்குகள் விவரம்</u>** | **தீர்மானம் எண். 232 அனுமதிக்கப்பட்டது** |

| **வ.எண்.** | **விளக்குகள் விவரம்** | | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | 40w குழல் விளக்குகள் | : | 3051 எண்ணிக்கை |
| 2 | 250w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 1371 எண்ணிக்கை |
| 3 | 150w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 109 எண்ணிக்கை |
| 4 | 70w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 37 எண்ணிக்கை |
| 5 | 70w LED விளக்குகள் | : | 40 எண்ணிக்கை |
| 6 | 120w LED விளக்குகள் | : | 78 எண்ணிக்கை |
| 7 | 150w LED விளக்குகள் | : | 222 எண்ணிக்கை |
| 8 | 150w LED விளக்குகள் (சென்டர் மீடியன்) | : | 223 எண்ணிக்கை |
| 9 | 100w LED விளக்குகள் | : | 34 எண்ணிக்கை |
| 10 | 250w LED விளக்குகள் | : | 28 எண்ணிக்கை |
| 11 | 400w உயர்மின் கோபுர விளக்குகள் (HML) | : | 356 எண்ணிக்கை |
| 12 | 150w உயர்மின் கோபுர விளக்குகள் (LED) | : | 48 எண்ணிக்கை |
| 13 | 1x36 காம்பேக்ட் புளோரோசென்ட் விளக்குகள் (CFL) | : | 180 எண்ணிக்கை |
| 14 | 4x36 காம்பேக்ட் புளோரோசென்ட் விளக்குகள் (CFL) | : | 530 எண்ணிக்கை |
| 15 | 36w LED விளக்குகள் | : | 106 எண்ணிக்கை |
| | **மொத்த விளக்குகள்** | | **6413 எண்ணிக்கை** |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சி பகுதியில் உள்ள 6413 தெரு விளக்குகளையும் பராமரிக்க தற்போது 2 மின் கம்பியாளர்கள் மற்றும் 2 மின் கம்பி உதவியாளர் மட்டுமே உள்ளனர். மேலும், இந்நகராட்சியில் போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததால், தெருவிளக்கு தொடர்பாக பொது மக்கள் அளிக்கும் புகாரின் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு தெரு விளக்குகளை எரிய வைக்க இயலாத நிலை உள்ளதால் நண்பர்கள் ஆடவர் சுய உதவிக்குழுவின் பணியாட்களை கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே, தெருவிளக்கு அவசர அவசியம் கருதி 14 நபர்களை கொண்டு பணி மேற்கொள்ள, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவரின் 2023–24ஆம் ஆண்டு செந்தூரப்பட்டியலின் படி (Schedule of Rates) Wireman Grade I/Electrician Grade-I ரூ.592/–, Electrical Helper (Assistant) ரூ.438/– என்ற இனங்களின்படி, 2023–24 ஆம் நிதி ஆண்டின் ஜீலை 2023 முதல் செப்டம்பர் 2023 வரை தொகை ரூ.7.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>3. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>**(கோப்பு எண்.1784/2018/இ1)** | |
| 69) | சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.7922/2016ல் திரு.C.விஜயபாலன் என்பவர் வேலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் மீது, இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண்.61/2019 08.06.2023 தேதியன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்றது. மேற்படி வழக்கின் இறுதி விசாரணையில் இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (AAG) Thiru.S.Silambanan and Standing Counsel Thiru.Eraskin Leo வழக்கறிஞர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.1,33,333/–ஐ செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் தொகை வழங்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 9696 / 2006 / இ1) | தீர்மானம் எண். 233<br>அனுமதிக்கப்பட்டது |
| 70) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.2 டாக்டர்.அம்பேத்கார் தெருவில் வசிக்கும் பொதுமக்கள் கோடைக் காலத்தில் போதிய குடிநீர் வசதி இல்லாத காரணத்தில் மிகவும் சிரமப்படுகிறார்கள். | தீர்மானம் எண். 234<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அப்பகுதியிலுள்ள 3 எண்ணிக்கை பழைய சிறுமின்விசை பம்புகள் பழுதடைந்துள்ளது. எனவே, பழுதடைந்த சிறுமின்விசை பம்புகளை பழுதுநீக்கம் செய்திட நகரமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டும், மேற்காணும் தெருவிற்கு சிறுமின் விசைபம்புகளை பழுதுபார்க்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.3155 /2023/இ1) | |
| 71) | இந்நகராட்சியில் தீபத் திருவிழா – 2022 க்கு தூய்மை பணிகள் மேற்கொள்ள வேலூர் மண்டலத்திற்கு உட்பட்ட 21 நகராட்களில் இருந்து அயலிடை பணிகள் மேற்கொள்ள வருகை புரிந்துள்ள தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சிறப்பாக பணிபுரிந்தமைக்கு உணவு உபசரிப்பு செய்தல் மற்றும் பரிசு பொருட்கள் (டிபன் பாக்ஸ்) வழங்குதல் ஆகிய பணிக்கு 12/2022ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>(உள் அட்டவணை கீழே)<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** | தீர்மானம் எண். **235**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | M.S. ஷாகுல் ஹமித்<br>அரபா பிரியாணி ஹோட்டல்<br>48 முகல்புறாத் தெரு<br>திருவண்ணாமலை | 1. மதிய உணவு ரூ. 90,000<br>2. கிப்ட் பாக்ஸ் ரூ.50,400<br>(140X360) |
| 2 | M.S.Abathakir, 7 star Briyani<br>79. Karikalan street, Tiruvannamalai | 1. மதிய உணவு ரூ. 95,000<br>2. கிப்ட் பாக்ஸ் ரூ.55,800<br>(155X360) |
| 3 | Rural Education Environment<br>Chanitable Trust<br>79/48 Mugal pura street<br>Thiruvannamalai | 1. மதிய உணவு ரூ. 95,000<br>2. கிப்ட் பாக்ஸ் ரூ.55,800<br>(160X360) |

| | | |
|---|---|---|
| | 1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கொடுத்துள்ள M/s.M.S.ஷாகுல் ஷமித் (அரபா பிரியாணி ஹோட்டல்) திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களில் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம். | |
| 72) | இந்நகராட்சியின் தீபத் திருவிழா – 2022க்கு தூய்மை பணிகள் மேற்கொள்ள வேலூர் மண்டலத்திற்குட்பட்ட 21 நகராட்சியில் இருந்து அயலிடை பணிகள் மேற்கொள்ள வருகை புரிந்துள்ள தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஓட்டுநர்கள் சிறப்பாக பணிபுரிந்தமைக்கு உணவு உபசரிப்பு செய்தல் மற்றும் பரிசு பொருட்கள் டிபன்பாக்ஸ் வழங்கவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 1,61,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண். 236<br>அனுமதி<br>வழங்கப்பட்டது |
| 73) | இந்நகராட்சியில் தீபத் திருவிழா – 2022 க்கு அயலிடை பணிக்காக வருகை தரும் தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு பாய், பெட்ஷீட் மற்றும் குளியல் சோப்பு சப்ளை செய்ய 28.11.2022ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மானம் எண். 237<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | கொடுத்துள்ள விலைப்புள்ளி (ஒன்றின் விலை) |
|---|---|---|
| 1 | President Rural Education Environment Charitable Trust<br>No. 79/48 Mugalpura street<br>Thiruvannamalai | 1. பாய் ரூ. 185<br>2. பெட் ஷீட் ரூ.260<br>3, சோப்பு ரூ. 32 |
| 2 | S.S. Traders<br>110 Anna Nagar<br>Avoor, Thiruvannamalai | 1. பாய் ரூ. 200<br>2. பெட் ஷீட் ரூ.275<br>3, சோப்பு ரூ. 35 |
| 3 | SAB Mat Industries<br>65 Pilliyar koil street<br>Avoor, Thiruvannamalai | 1. பாய் ரூ. 210<br>2. பெட் ஷீட் ரூ.270<br>3, சோப்பு ரூ. 34 |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிச எண்.1–ல் கொடுத்துள்ள "President Rual Education Environment Charitable Trust, திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களில் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>74)</td><td>இந்நகராட்சியில் தீபத் திருவிழா – 2022 க்கு முன்னேற்பாடுகள் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு 06.12.2022 அன்று நடைபெறும் மகாதீபத்தன்று பொது மக்கள் அதிக அளவில் கூட்ட நெரிச்சல் உள்ள பகுதிகளில் தற்காலிகமாக வலை பின்னல் இணைப்பு கொண்ட குப்பை தொட்டிகள் அமைக்கும் பணிக்கு 28.11.2022ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>President Rural Education Environment Charitable Trust<br>No. 79/48 Mugalpura street<br>Thiruvannamalai</td><td>ஒன்றின் விலை ரூ. 2500/–</td></tr>
<tr><td>2</td><td>PARVATH MINERULS<br>10/3 Mariyamman Hr.sec.school road<br>Trichy.</td><td>ஒன்றின் விலை ரூ. 2750/–</td></tr>
</table>
<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கொடுத்துள்ள M/s.President Rural Education Environment Charitable Trust, திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனமதிக்கலாம்.<br>ந.க.எண். 9652 / 2022 / எச்2</td><td>தீர்மானம் எண். 238<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>75)</td><td>அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023ல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற தலைவருக்கு ரூ.15,000/–, நகரமன்ற துணைத் தலைவருக்கு ரூ.10,000/– மற்றும் நகரமன்ற உறுப்பினருக்கு ரூ.5,000/– என மதிப்பூதியம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்</td><td>தீர்மானம் எண். 239<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>வைக்கப்படுகிறது.<br>இதன்படி, திருவண்ணாமலை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 39 வரையில் உள்ள நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுக்கு, மேற்படி அரசாணையில் மதிப்பூதியம் வழங்க ஜீலை – 2023 முதல் மார்ச் – 2024 வரை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. அரசாணை பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>கோப்பு எண். 3336 /2023/சி1</td>
<td></td>
</tr>
<tr>
<td>76)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.17ல் இராமலிங்கனார் தெருவில் திருக்கோவிலூர் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் 130 மாணவ / மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு மாணவ / மாணவிகளுக்கு போதிய கழிவறை வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமமாக உள்ளது என்று தலைமையாசிரியர் கோரியுள்ளதை தொடர்ந்து, பள்ளி மாணவ / மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு 10 இருக்கை வசதிகள் (மாணவர்–5 + மாணவிகள்–5) கொண்ட சிறுவர் கழிவறை வசதிகள் (Baby Friendly Toilet) செய்ய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.</td>
<td>தீர்மானம் எண். 240<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>77)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்–24 வ.உ.சி. நகரில் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிக்கு RCC சுற்றுச்சுவர் அமைத்து, சுகாதாரமான குடிநீர் வழங்கிடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.95, நாள் 10.06.2022ல் மன்ற அனுமதி பெறப்பட்டு, 07.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>M/s.Gold Construction<br>அருணகிரிபுரம் 1–வது தெரு<br>திருவண்ணாமலை.</td><td>9.90</td><td>0.04 % குறைவு</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண். 241<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திரு.G.காளிதாஸ்<br>15/13.வடவீதி சுப்பரமணியர் கோவில் தெரு,<br>திருவண்ணாமலை.</td><td></td><td>1.31 % அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
1. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1 கண்டுள்ள M/s. Gold Construction என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண். 0040 /2023 /இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>78)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.5 புதுவாணியங்குளத் தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், சாலை குண்டும் குழியுமாக இருப்பதாலும், மழைநீர் மற்றும் கழிவுநீர் கால்வாயில் செல்லாமல் சாலையில் தேங்குகிறது. எனவே, அப்பகுதி பொதுமக்கள் சென்றுவர மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மேற்படி சாலை, வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு சரிசெய்து தந்திட கோரியுள்ளதன்படி, மேற்படி சாலையை Well Gravel மற்றும் PCC 1:4:8 நிரப்பி சமன்படுத்தி சிமெண்ட் சாலை அமைத்திடவும், மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக்கு குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.</td>
<td>தீர்மானம் எண். 242<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>79)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சியில் தற்போது குடிநீர் திட்டமானது உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து முதலாவது திட்டம் (1972 ஆம் ஆண்டு முதல்) – 350MM Cast–iron Pipe, இரண்டாவது திட்டம்(1993 ஆம் ஆண்டு முதல்) – 600MM Pre–Stressed Concrete Pressure Pipes, மூன்றாவது திட்டம் (2013 ஆம் ஆண்டு முதல்) – 450MM Ductile iron Pipes ஆகிய மூன்று திட்டங்களும் திருவண்ணாமலை – அரூர் நெடுஞ்சாலையின் ஓரமாக அமைக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 19MLD பெறப்பட்டு, குடிநீரானது நகராட்சி பகுதிகள் மற்றும் வழியோர ஊராட்சி பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.<br>
தற்போது நெடுஞ்சாலைத் துறை சாலை அமைக்கும் பணியினாலும், மின் அழுத்தம் காரணமாக மின்மோட்டார் நிறுத்தம் செய்து மீண்டும் போடப்படும் போது Air Lock ஆலும் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்பு அடிக்கடி ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகம் முழுவதும் பாதிக்கப்படுகிறது. எனவே, அடுத்த ஓராண்டு காலத்திற்கு Pumping Main–ல் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்பு பணிகளை சரிசெய்திட செந்தூர விலைப் பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண். 243<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.574/2023/இ2) | |
| 80) | திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 39 வரையுள்ள பகுதிகளில், பாதாள சாக்கடை ஆள் இறங்கும் குழியின் பழுதடைந்த மூடிகள் மற்றும் மூடிக்கான பிரேம்கள் (FRC Manhole Cover and Frame) சப்ளை செய்யும் பணிக்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.2172/2023/இ2) | தீர்மானம் எண். **244**<br>அனுமதிக்கப்பட்டது |
| 81) | திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 39 வரையுள்ள பகுதிகளில், பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டியினை சாலை மட்டத்திற்கு உயர்த்துதல் மற்றும் ஆற் இறங்கும் தொட்டியிலுள்ள கசடுகளை அகற்றுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2171/2023/இ2) | தீர்மானம் எண். **245**<br>அனுமதிக்கப்பட்டது |
| 82) | திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 பேகோபுரம் தெரு உள்ள சிறுபாலம், கழிவுநீர் பகிர்மானக் குழாய் மற்றும் பாதாள சாக்கடை கழிவுநீர் தொட்டி அமைத்திட பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினரின் கோரிக்கையின்படி, மேற்காணும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.45 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **246**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 83) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.14 பேகோபுரம் 4,5,6 மற்றும் 7-வது தெருக்களிலுள்ள சிமெண்ட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய் துண்டிப்பு செய்த்தை சரி செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு, நகரமன்ற உறுப்பினர் கோரிக்கையின்படி, மேற்காணும் தெருக்களில் சிதலமடைந்து சிமெண்ட் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **247**<br>அனுமதிக்கப்பட்டது |
| 84) | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களால் அவ்வப்போது காணொலிக் காட்சி மூலம் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. அனேக நேரங்களில் மாவட்டத்திலுள்ள மற்ற 3 நகராட்சி அலுவலர்களையும் சேர்த்து, திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் காணொலிக் காட்சி மூலம் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள தெரிவிக்கப்படுகிறது. தற்போது, காணொலிக் காட்சிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஆணையாளர் அறை போதுமான மின்னனு உபகரணங்கள் இல்லாத காரணத்தினால், சில நேரங்களில் காணொலிக் காட்சி தடை ஏற்படுகிறது. எனவே, Camera, Hybrid Conference Phone with Mic, USB மற்றும் Mini PC பொருத்தி காணொலிக் காட்சி அறை அமைக்கவும் மற்றும் திருவண்ணாமலை நகராட்சி அலுவலக மேலாளர் மற்றும் கணக்காளர் அமைவிடத்தில் Partition மற்றும் இதரப் பணிகள் செய்திடவும், தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **248**<br>அனுமதிக்கப்பட்டது |
| 85) | திருவண்ணாமலை நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள Common Kitchen கூரை Ventilation -காக திறந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளதால், தற்போது பறவைகள், குரங்குகள் உள்ளே வந்து இருப்பு அறையில் உள்ள மளிகைப் பொருட்களை சேதப்படுத்தி வருவதாக சுயஉதவி குழுவினர் தெரிவித்துள்ளனர். மேலும், சமையல் செய்வதற்கு குடிநீர் கேன் கொள்முதல் செய்வதாகவும், இதனால் கூடுதல் செலவினம் ஏற்படுவதாக தெரிவித்துள்ளனர். எனவே, 250 லிட்டர் திறன் கொண்ட RO Plant அமைத்திடவும், மற்றும் திறந்த நிலையில் உள்ள Ventilation-ல் இரும்புவலை பொருத்திடவும் ரூ.2.50 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். **249**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>86)</td>
<td>திருவண்ணாமலை நகராட்சியில் தகவல் தொழில் நுட்பப் பிரிவு மற்றும் தணிக்கை பிரிவுவில் உள்ள பிரிண்டர்கள் பழுதடைந்து உள்ளதால் அன்றாட அலுவலக பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் புதியதாக 3 எண்ணிக்கை பிரிண்டர்களை அரசு நிறுவனமான "ELCOT"ல் நேரடியாக கொள்முதல் செய்துக்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 1,00,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 3303 / 2023 / சி1</td>
<td>தீர்மானம் எண். 250<br>அனுமதி<br>வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>87)</td>
<td>திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் 36–வது மாநில இளையோர் தடகளப் போட்டி வருகின்ற 16.10.2022 முதல் 19.10.2022 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ளும் வீரர் / வீராங்களைகள் தங்கம் போலிஸ் பேரக்ஸில் தண்ணீர் வசதி மற்றும் போட்டி நடைபெறும் மாவட்ட விளையாட்டரங்கில் 4 எண்ணிக்கை Mobile Toilet மற்றும் குடிநீர் வசதி செய்திடும் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.45 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>3. நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 9526 / 2022 / இ2)</td>
<td>தீர்மானம் எண். 251<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>88)</td>
<td>திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் 36–வது மாநில இளையோர் தடகளப் போட்டி வருகின்ற 16.10.2022 முதல் 19.10.2022 வரை நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ளும் வீரர் / வீராங்களைகள் தங்கம் போலிஸ் பேரக்ஸில் தண்ணீர் வசதி மற்றும் போட்டி நடைபெறும் மாவட்ட விளையாட்டரங்கில் 4 எண்ணிக்கை Mobile Toilet மற்றும் குடிநீர் வசதி செய்திடும் பணிகளுக்கு நகரமன்ற முன் அனுமதி பெற்று, 14.10.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்துக் கொண்டவரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>திரு.பாலமுரளிகிருஷ்ணன்<br>திருவண்ணாமலை.</td><td rowspan="2">0.45</td><td>0.10% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.மாரிமுத்து<br>திருவண்ணாமலை.</td><td>0.80% அதிகம்</td></tr>
</table></td>
<td>தீர்மானம் எண். 252<br>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>கோல்டு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>திருவண்ணாமலை.</td><td></td><td>1.50% அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
1. குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>89)</td>
<td>
திருவண்ணாமலை நகராட்சி பகுதி, வார்டு எண்–04, பிளாக் எண்–35, நகரளவு எண்–1882/9–ல் 0.56 ஏக்கர் பரப்பு காலியிடத்தை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு வரைபடங்கள் தயாரித்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களுக்கு சமர்ப்பித்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரிடம் தொழில்நுட்ப அனுமதி (SWP/DTCP/Thiruvannamalai District Layour No.77/2023) பெற்று, இறுதி ஒப்புதலுக்காக 16.03.2023–ல் மனைப்பிரிவு உரிமையாளர் திரு.L.நாகராஜன் விண்ணப்பித்துள்ளார்.<br>
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கூராய்வு செய்ததில், புயதிதாக தெருக்கள் ஏதும் அமையப்பெறவில்லை. ஏற்கனவே நகராட்சி பராமரிப்பில் உள்ள நிலையிலுள்ள சாலையில் போதிய மின் விளக்கு கம்பங்கள் உள்ளது. ஆகையால் அடிப்படை வசதிகளில் மழைநீர் வடிகால்கள் மட்டும் அவசியமாகிறது. பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி ரூ.5,00,000/– மனைப்பிரிவு உரிமையாளர் நகராட்சி கருவூலத்தில் 30.05.2023–ல் செலுத்தியுள்ளார்.<br>
பொது உபயோக இடங்கள் நகராட்சிக்கு 12.61 ச.மீ. மின்வாரியத்திற்கு 13.54 ச.மீ. காலியிடங்களை மனைப்பிரிவு உரிமையாளர் தான ஆவணம் 924/2023ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து, நகராட்சி ஆணையாளர் பெயருக்கு உட்பிரிவு செய்து, வருவாய் வட்டாட்சியர் ஒப்புதல் பெற ஆவணங்களை 27.03.2023–ல் நகராட்சிக்கு ஒப்படைத்து விட்டார். மேலும், தனியார் நிலத்தை தெருக்களாகவும், மனைகளாகவும் பிரிக்க கட்டணம் ரூ.7,500/– கூராய்வு கட்டணம் 07 மனைகளுக்கு தலா ரூ.1,000/– வீதம் ரூ.7,000/– உட்பிரிவு கட்டணம் மனைக்கு ரூ.500/– வீதம் 07 மனைகளுக்கு ரூ.3,500/– ஆக மொத்தம் ரூ.18,000/– மட்டும் நகராட்சி கருவூலத்தில் 30.05.2023–ல் செலுத்தியுள்ளார்.<br>
ஆகவே, இந்த மனைப்பிரிவில் அமைந்துள்ள 01 முதல் 07 வரையுள்ள 07 குடியிருப்பு மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தொழில்நுட்ப அனுமதியில் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகின்றது.<br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1108/2023/எப்2)
</td>
<td>தீர்மானம் எண். 253<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 90) | இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்பழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC Workers) 120 நபர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலமாக பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் பணியின் போது விபத்துக்கள் அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு நகராட்சியால் செலுத்தஇயலாத நிலை உள்ளதாலும், மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் போது காப்பீடு, தொழிலாளர் நல நிதி உள்ளிட்ட சட்ட முறையை பின்பற்றுவதில் நடைமுறை சிக்கல் எழுவதாலும், நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களையும் தனியார் மூலம் நிரப்ப (Out Sourcing) மேற்கொள்ள வேண்டியதன் அடிப்படையிலும், அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் அவர்களின் 24.10.2017 ஆம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13433/2018/ஜே1 நாள் 17.09.2018ல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு டெங்கு காய்ச்சல் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்தி கொள்ளுமாறு (Out Sourcing) அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையிலும், இந்நகராட்சியின் 120 டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்திக்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிக்கோரி **M/s.HMS** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகரமன்ற தீர்மான எண்.138 நாள் 18.05.2023ல் மன்ற அனுமதி பெறப்பட்டு, 28.06.2023 வரையான காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டு, தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>தற்பொழுது அவர்களின் பணிக்காலம் 28.06.2023 உடன் நிறைவடைவதாலும், தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரி நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என்பதாலும் 29.06.2023 முதல் 25.09.2023–ஆம் மாதம் வரை 89 நாட்களுக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு நோய் தடுப்பு பணிகள் பாதிக்காதவாறு தொடர்ந்து இந்நிறுவனத்தார் முன்னர் அளித்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையிலேயே மேற்கண்ட காலத்திற்கு **M/s.HMS** என்ற நிறுவனத்திற்கே பணி நீட்டிப்பு வழங்கிடவும் இவைக்காகும் தோராய செலவின தொகை ரூ.30.00 இலட்சத்திற்கு (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று M/s.HMS, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்திற்கு 29.06.2023 முதல் 25.09.2023 வரையிலான காலத்திற்கு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். எவ்வித முன் உரிமையும் நகராட்சியில் கோரப்படாது எனும் உறுதிமொழி ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்து பழைய மாவட்ட ஆட்சித்தலைவரின் ஊதிய விகித்தில் அனைத்து பிடிப்புகளுடன் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2692/2016/எச்1** | தீர்மானம் எண். **254**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 91) | திருவண்ணாமலை நகராட்சிப் பகுதி, வார்டு–04, பிளாக்–35, நகரளவு எண்.1879/1B –ல் 2.40 ஏக்கர் பரப்பளவுள்ள காலியிடத்தை குடியிருப்பு மனைகளாக அபிவிருத்தி செய்யும் பொருட்டு, உரிய வரைபடங்களை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு சமர்ப்பித்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் ந.க.எண்.OOYNRXII/2023 நாள் 12.04.2023ல் தொழில்நுட்ப அனுமதி பெற்று இறுதி ஒப்புதலுக்காக மனைப்பிரிவு உரிமையாளர்கள் திரு.K.தருமராஜ் மற்றும் மூவர் 18.04.2023ல் நகராட்சியிடம் விண்ணப்பித்துள்ளார்கள்.<br>இந்நகராட்சி அறிவிப்பு ந.க.எண்.1550/2023/எப்2 நாள் 15.05.2023ல் அடிப்படை வசதி பணிகளுக்கு பொறியாளர் மதிப்பீட்டின்படி ரூ.66.50 இலட்சங்களை செலுத்த மனைப்பிரிவு உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மனைப்பிரிவு உரிமையாளர் 17.05.2023ல் சமர்ப்பித்த மனுவை நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி பரிசீலித்து இந்நகராட்சி அனுமதி ந.க.எண்.1550/2023/எப்2 நாள் 22.05.2023ல் அடிப்படை வசதிகளை மனைப்பிரிவு உரிமையாளரே மேற்கொள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது.<br>மேற்படி, மனைப்பிரிவில் விதிகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் மூலை முடக்குடன் 2514.4 ச.மீ., பொது உபயோக இடம் 38.84 ச.மீ. மின் உபயோக இடம் 40.25 ச.மீ. காலியிடங்களை தான ஆவண எண்.1348/23ல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து, இந்த காலியிடங்களை உட்பிரிவு செய்து, பட்டா பெயர் மாற்றம் செய்து வருவாய் வட்டாட்சியர் ஒப்புதலுடன் 01.06.2023ல் ஆவணங்களை ஒப்படைப்பு செய்துள்ளார்.<br>மேற்படி மனைப்பிரிவுக்கு சாலைகள், மழைநீர் வடிகால்கள், சிறுபாலங்கள், குடிநீர் வசதிக்கான குழாய்கள் அமைப்பு போன்ற பணிகளை மனைப்பிரிவு உரிமையாளரால் கட்டமைக்கப்பட்டதை நகராட்சி பொறியாளர் ஆய்வு செய்து 12.06.2023ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும், மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகளுடன் 08 எண்ணிக்கை அமைக்க மனைப்பிரிவு உரிமையாளர் ரூ.1,31,000/–ஐ வங்கி வரைவோலை எண்.142641 நாள் 27.06.2023 பாரத ஸ்டேட் பேங்க், பஜார் கிளையில் பெற்று, மனைப்பிரிவு உரிமையாளர் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தியுள்ளார். மேலும், நகராட்சியின் அறிவிப்புகளில் உள்ளபடி ரூ.1,39,436/–ஐ நகராட்சி கருவூலத்தில் ரசீது எண்.040/TM6/1/23–24/ 0003989 நாள் 28.06.2023ல் செலுத்தியுள்ளார்கள்.<br>ஆகவே, திருவண்ணாமலை நகராட்சிப் பகுதி, வார்டு–04, பிளாக்–35, நகரளவு எண்.1879/1B –ல் 2.40 ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள 01 முதல் 48 வரையிலான 48 குடியிருப்பு மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இறுதி ஒப்புதல் அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். **255**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>(ந.க.எண்.1550/2023/எப்2)</td><td></td></tr>
<tr><td>92)</td><td>திருவண்ணாமலை நகராட்சி பகுதியில் காந்திநகர் மைதானத்தில் 09.04.2023 அன்று புத்தக கண்காட்சி நடைபெற இருப்பதால், கண்காட்சி நடைபெறும் இடங்களில் பள்ளி மாணவர்கள், ஆசியர்கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சிக்கு வருகை தர இருப்பதால் அவர்களுக்கு அத்தியாவசியமாக குடிநிர், கழிவறை வசதிகள் ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்கள் தெரிவித்ததன் பேரில், பொறியாளர் மற்றும் ஆணையாளர் அவர்களால் கள ஆய்வுமேற்கொள்ளப்பட்டு, புத்தக கண்காட்சி நடைபெறும் இடத்தில் அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் கழிவறை அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 256<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>93)</td><td>திருவண்ணாமலை நகராட்சி பகுதியில் காந்திநகர் மைதானத்தில் 09.04.2023 அன்று புத்தக கண்காட்சி நடைபெற இருப்பதால், கண்காட்சி நடைபெறும் இடங்களில் பள்ளி மாணவர்கள், ஆசியர்கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சிக்கு வருகை தர இருப்பதால் அவர்களுக்கு அத்தியாவசியமாக குடிநிர், கழிவறை வசதிகள் செய்திடும் பணிகளுக்கு நகரமன்ற முன் அனுமதி பெற்று, 07.04.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்துக் கொண்டவரின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>திரு.பாலமுரளிகிருஷ்ணன் திருவண்ணாமலை.</td><td rowspan="3">1.30</td><td>0.10% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.மாரிமுத்து திருவண்ணாமலை.</td><td>0.80% அதிகம்</td></tr>
<tr><td>3</td><td>கோல்டு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திருவண்ணாமலை.</td><td>1.50% அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மானம் எண். 257<br>அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :**<br>1. குறைந்த **விலைப்**புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| 94) | திருவண்ணாமலை நகராட்சி வார்டு எண்.1 ஈசான்யம் உரக்கிடங்கில் உள்ள நுண்உர மையம் (MCC), மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள நுண்உர மையம் (MCC), இரயில்வே கேட் அருகிலுள்ள நுண்உர மையம் (MCC) ஆகியவைகளிலுள்ள அரைவை இயந்திரம் பழுதடைந்துள்ளது. பழுதடைந்துள்ளதை சரிசெய்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்கு குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண். 258 அனுமதிக்கப்பட்டது |
| 95) | திருவண்ணாமலை நகராட்சியில், தற்போது CGF சாலை பணிகள், NSMT சாலை பணிகள், 15th CFC பணிகள், இவை தவிர்த்து, 39 வார்டுகளில் வருவாய் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது திருவண்ணாமலை நகராட்சியில் பொறியியல் பிரிவில் அரசாணை எண்.10 (23.01.2023) ன்படி,<br><table><tr><th>வ.எண்</th><th>பணியிடத்தின் பெயர்</th><th>அனுமதிக்கப்பட்டது</th><th>தற்போதுள்ளது</th></tr><tr><td>1</td><td>செயற் பொறியாளர் (நிலை–1)</td><td>1</td><td>1</td></tr><tr><td>2</td><td>உதவி பொறியாளர் /<br>இளநிலை பொறியாளர்</td><td>3</td><td>1</td></tr><tr><td>3</td><td>பொதுப்பணி மேற்பார்வையாளர்</td><td>3</td><td>–</td></tr><tr><td>4</td><td>படவரைவாளர் நிலை–III</td><td>1</td><td>–</td></tr><tr><td>5</td><td>பணி ஆய்வர்</td><td>5</td><td>–</td></tr></table>மேற்படி, பணியாளர் மட்டுமே உள்ளனர். மேலும், புதிய பேருந்து நிலையம் மற்றும் புதிய மார்க்கெட் அமைக்கும் பணிகள் நகராட்சியில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அனுதினமும் புள்ளிவிவரங்கள் மற்றும் காணொலி காட்சி ஆய்வுக் கூட்டம் நடைபெறுவதால், அலுவலகப் பணிகள் தேக்கம் அடைந்துள்ளது.<br>அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, வெளிக் கொணர்வு (Out Sourcing) முறையில் 3 எண்ணிக்கை கணினி தொழில்நுட்ப உதவியாளர் (Computer Technical Assistant) (BE Qualification) அடுத்த ஓராண்டு காலத்திற்கு நியமித்து, புதிய பேருந்து நிலையம் மற்றும் புதிய மார்க்கெட் பணிகளை கண்காணிக்க உதவியாக நியமித்திடலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு மாவட்ட ஆட்சியரின் 2023–24 ஆம் ஆண்டிற்கான விலை விகிதப்படி ரூ.10.10 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. | தீர்மானம் எண். 259 அனுமதிக்கப்பட்டது |

Number of Technical Assistant = 3
Collector SOR Rated = Rs.769/ per day
Total Workidng Days = 365
= 3x769x365
Sub Total = Rs.842055.00
GST 18% = Rs. 151570.00
LWF = Rs. 10000.00
-----------
Total = Rs.1003625.00 (or) Rs.10,10,000/-
-----------

மேற்காணும் தொகை ரூ.10.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (புதிய பேருந்து நிலைய திட்ட மதிப்பீட்டில் 1% project Manager Consultant நியமித்து பணிகளை கண்காணித்திட தெரிவிக்கப்பட்டுள்ளதால், செலவினத்தை திட்ட நிதயில் ஈடு செய்திடலாம்)

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளலாம்.

96) திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 முதல் 39 வரையுள்ள வார்டுகளில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 27.03.2023 அன்று மன்ற அனுமதி பெறப்பட்டு, 15.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.21 திருக்கோவிலூர் சாலையில் 69 மீட்டர் நீளத்திற்கு மண் சாலையினை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைக்கும் பணி | 4.80 | M/s. Linga Construction | 0.02 % குறைவு |
| | | | M/s. Gold Construction | 2.50 % அதிகம் |
| 2 | வார்டு எண்.25 பெரும்பாக்கம் சாலையிலுள்ள கால்வாய் தரைமட்டத்தினைவிட தாழ்ந்துள்ளதால் கால்வாயின் உயரத்தை சாலை மட்டத்திற்கு உயர்த்துதல், புதியதாக அமைக்கப்பட்ட கால்வாய்க்கும், பழைய கால்வாய்க்கும் இடைப்பட்ட 12 மீட்டருக்கு புதியதாக கால்வாய் அமைத்திடும் பணிகள். | 2.00 | P.Iyappan | 0.19 % குறைவு |
| | | | M/s. Gold Construction | 1.59 % அதிகம் |

தீர்மானம் எண். **260**
அனுமதிக்கப்பட்டது

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | வார்டு எண்.27 MKS தியேட்டர் குறுக்குத் தெருவின் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால், சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 3.75 | P.G.Kannan | 0.01 % குறைவு | | |
| | | | | | M/s. GM Construction | 0.15 % அதிகம் | | |
| | | 4 | வார்டு எண்.29 பாவாஜி நகர் குறுக்குத் தெருவிற்கு புதிய சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 4.70 | M/s.Sai Baba Construction | 0.14 % குறைவு | | |
| | | | | | M/s. Gold Construction | 0.93 % அதிகம் | | |
| | | 5 | வார்டு எண்.31 அண்ணாநகர் 4-வது தெருவிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கும் அண்ணாநகர் புதிய நீருந்து நிலையத்திற்கும் அருகிலுள்ள கிணற்று மாசடைந்துள்ளதால், இப்பகுதியினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து, கிணற்றினை தூர்வாரி, Grill அமைத்தல் போன்ற பராமரிப்பு பணிகளை செய்தல். | 5.00 | M/s.Sai Baba Construction | 0.12 % குறைவு | | |
| | | | | | M/s. Gold Construction | 1.93 % அதிகம் | | |
| | | 6 | வார்டு எண்.33 அண்ணா நகர் 9-வது தெருவில் புதியதாக சிறுபாலம் மற்றும் 100 மீட்டர் நீளத்திற்கு கால்வாய் அமைத்தல். | 4.42 | G.Kalidoss | 0.04 % குறைவு | | |
| | | | | | M/s. Gold Construction | 2.38 % அதிகம் | | |
| | | 7 | வார்டு எண்.35 கானா நகர் பகுதியில் உள்ள சிறுபாலம் சாலை மட்டத்தைவிட உயரமாக இருப்பதால், சாலை பராமரிப்பு பணிகள் செய்தல். | 2.20 | G.Kalidoss | 0.01 % குறைவு | | |
| | | | | | M/s. Gold Construction | 1.09 % அதிகம் | | |
| | | 8 | வார்டு எண்.37ல் உள்ள மணியாரித் தெருவில் உள்ள பொது கிணற்றினை தூர்வாரி, கம்பிவலையால் ஆன கிரீல்மூடி அமைத்து மோட்டார் பொருத்தி டேங்க் அமைத்தல். | 2.50 | M/s. Gold Construction | 0.44 % குறைவு | | |
| | | | | | G.Kalidoss | 2.08 % அதிகம் | | |
| | | 9 | வார்டு எண்.38 அருணகிரிபுரம் பகுதியில் புதியதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 4.80 | G.Kalidoss | 0.05 % குறைவு | | |
| | | | | | M/s. Gold Construction | 1.15 % அதிகம் | | |
| | | 10 | வார்டு எண்.39ல் உள்ள வேல்நகர், குறுக்குத் தெரு, மாரியம்மன் கோவில் தெரு மற்றும் சூர்யா நகர் பகுதியில் புதியதாக கால்வாய், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 4.00 | M/s. Gold Construction | 0.06 % குறைவு | | |
| | | | | | G.Kalidoss | 2.05 % அதிகம் | | |
| | | 11 | **நகராட்சி அலுவலக கட்டிடத்தின் தரைதளத்திலுள்ள**<br>பெண்கள் கழிப்பறை-3எண்ணிக்கை<br>ஆண்கள் கழிப்பறை-2 எண்ணிக்கை<br>சிறுநீர் கழிப்பறை-3 எண்ணிக்கை | 5.00 | M/s. Gold Construction | 0.10 % குறைவு | | |
| | | | | | G.Kalidoss | 1.24 % அதிகம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **முதல் தளத்திலுள்ள**<br>பெண்கள் கழிப்பறை–3 எண்ணிக்கை<br>ஆண்கள் கழிப்பறை–2 எண்ணிக்கை<br>சிறுநீர் கழிப்பறை–3 எண்ணிக்கை<br>அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. தற்போது இந்த கழிப்பறைகளிலுள்ள Tiles களும், Urinal உடைந்த நிலையிலுள்ளது. மேற்காணும் கழிப்பறைகளில் உடைந்த பொருட்களை மாற்றியமைத்து பராமரிப்பு பணிகள். | | | |
| 12 | வார்டு எண்.39 கணேசபுரம் குறுக்குத் தெருவில் பராமரிப்பு பணியின் கீழ் புதியதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் பகுதியளவு சிமெண்ட் சாலை அமைத்திடும் பணிகளுக்கு. | 4.80 | M/s. Gold Construction | 0.02 % குறைவு |
| | | | G.Kalidoss | 1.04 % அதிகம் |
